**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.155/2024 |
| Deposition of witness for Prosecution | : | P.W–1 |
| Name | : | லட்சுமி, வயது 34 |
| Father Name/Husband Name | : | மோகன்தாஸ் |
| Village | : | கழுகுமலை |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | பூக்கட்டும் தொழில் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of November 2024.

**(எதிரி ஆஜர்.)**

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது கழுகுமலையில் வசித்து பூக்கட்டும் தொழில் செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும் எங்கள் ஊரைச்சேர்ந்தவர். வழக்கில் இறந்து போன கந்தசாமி எனது அப்பா. அப்பா தச்சு வேலை செய்து வந்தார். கடந்த 17.08.2024 ஆம் தேதி இரவு 07.00 மணியளவில் தச்சு வேலைக்கு காலங்கரைபட்டிக்கு எனது அப்பாவும் ஆஜர் எதிரியும் TVS இருச்சக்கர வாகனத்தில் சென்றனர்.
2. எனக்கு சிவசுப்பிரமணியம் என்பவர் இரவு நேரத்தில் போன் செய்து காலங்கரைபட்டிக்கு தச்சு வேலைக்கு சென்றுவிட்டு வரும் போது விபத்து ஏற்பட்டு இறந்துவிட்டதாகவும் 108 ஆம்புலன்சில் கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு சென்றதாகவும் தகவல் சொன்னார்.
3. நான் மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது எனது அப்பா இறந்துவிட்டார். பின்னர் நான் கழுகுமலை காவல்நிலையத்திற்கு மறுநாள் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார்மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
4. எனது அப்பாவின் உடல் மீது நடந்த பிரேத விசாரணையின் போது உடன் இருந்தேன். எனது அப்பாவிற்கு மண்டை உடைந்து, மூக்கில் இரத்தம் வந்திருந்தது. கை, கால்களில் அடிபட்டு உடல்

முழுவதும் சிராய்ப்பு காயங்கள் இருந்தன. வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1. நீங்களும் எதிரியும் உறவினர்கள் என்றால் இல்லை ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள். நீங்களும் சங்கரி என்பவரும் இரண்டு பெண்கள் தான் உங்கள் பெற்றோருக்கு. உங்கள் அம்மா இறந்த பின்னர் உங்கள் அப்பா கிடைக்கும் வேலைக்கு போவார் என்றால் இல்லை தச்சு வேலைக்கு போவார். அவர் ஓட்டலில் தான் சாப்பிடுவார் என்றால் ஆம் ஆனால் என் உடன் தான் இருந்தார்.
2. நீங்கள் கொடுத்த புகார் மனுவில் நீங்களே எழுதினீர்களா அல்லது எழுதிய பேப்பரில் கையொப்பம் செய்தீர்களா என்றால் நான் தான் எழுதினேன். எதிரி மீது நஷ்ட ஈடு கேட்டு சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் ஆம்.
3. நீங்கள் எழுதிய புகாரில் உங்கள் அப்பாவை யார் ஆம்புலன்சில் ஏற்றி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் என்ற விவரங்களை நீங்கள் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல சொல்லியுள்ளேன். இறந்த நபர் உங்கள் அப்பா என்பதால் நீங்கள் வழக்கிற்காக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.